*செய்தி வெளியீடு எண் : 03* *நாள் : 01.10.2019*

**தேனி மாவட்டம்**
**வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதையொட்டி**
**ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில்**
**மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*******

*தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட வருசநாடு, தும்மக்குண்டு, மயிலாடும்பாறை, ஆகிய பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.10.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,*

*இந்திய வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின்படி, வடக்கிழக்கு பருவமழை, அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பெய்யக்கூடும். கடந்த வடக்கிழக்கு பருவமழை காலங்களில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*வெள்ளம் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளான இடங்கள் கண்டறியப்பட்டு, (Vulnerable areas) இப்பகுதிகள் அனைத்திற்கும் முதல்நிலை பொறுப்பாளர்கள் (First Responders) நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மழை, வெள்ளம் குறித்தான முதல் தகவலினை தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் உள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, 04546-261093 தொலைபேசி எண் மற்றும் கைபேசி எண் 94877 71077 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவித்து முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு பணிகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. .*

*கடந்த காலங்களில் வெள்ளப் பெருக்கின்போது கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் தாழ்வான பகுதிகளாக கண்டறியப்பட்ட இடங்களில் மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் தடுக்கும் வகையிலும், மேலும் வெள்ள பெருக்கு ஏதும் ஏற்படின், அச்சமயங்களில் மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் தெரிவித்து மீட்புபணிகளை மேற்கொள்ளவும், மழை காலத்தில் தொற்று நோய் பரவாமல் தடுத்திட தேவையான உயிர் காக்கும் மருந்துகளை இருப்பில் வைத்திடவும், குடிநீரினை காய்ச்சி பருகிட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மற்றும்*

*குடிநீரில் தேவையான அளவு குளோரின் கலந்து தினமும் பரிசோதித்து பொதுமக்களுக்கு வழங்கிடவும், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் மழை காலங்களில் கழிவுநீர் செல்லும் வாய்க்கால்கள் மற்றும் சிறுபாலங்களை தூர்வாரி பராமரித்திடவும், பொதுப்பணித்துறையினர் தங்களின் கட்டுபாட்டில் உள்ள அணைகளின் மதகுகளை பராமரித்து இயங்கும் நிலையில் வைத்திடவும், கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தி நீர் வரத்தினை கண்காணித்திடவும், நீர் வெளியேற்றும் நிலை ஏற்படும் பொழுது ஆற்று கரையோரங்களில் உள்ள பொதுமக்களுக்கு ஒலி பெருக்கி மற்றும் தண்டோர மூலம் அறிவிப்பு செய்திடவும், ஆறு, குளம், நீர் செல்லும் கால்வாய் கரைகளில் உடைப்பு ஏற்படும் பட்சத்தில் அதனை சீரமைத்திட தேவையான அளவு மணல் மூட்டையினை தயார் நிலையில் வைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட மூல வைகை ஆற்றின் நீர்வரத்து, முருக்கோடை, மொட்டனூத்து ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், தும்மக்குண்டு பகுதியில் மாகத்மா தேசிய ஊரக வேலைவாய்ப்பு ஊறுதித்திட்டத்தின் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் வீரசின்னமாள்புரம் முதல் வண்டியூர் வரை ஒடை வரத்து வாய்க்கால், குளங்கள், நீர் செறிவூட்டும் குழிகள் மற்றும் வெட்டிவேர் நடவு செய்யப்பட்டுள்ள பணிகளை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பணிகளை துரிதப்படுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.*

*ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, வட்டாட்சியர் சந்திரசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கருப்பசாமி, திருப்பதிவாசகன் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***